மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!!

# வாலாஜாபேட்டை நகராட்சி

## நகரமன்ற அவசரக் கூட்டம்

**வாலாஜாபேட்டை நகராட்சியில் 2021-ம் வருடம் செப்டம்பர் மாதம் 13-ந் தேதி திங்கள்கிழமை காலை 11.00 மணியளவில் நகரமன்றக் கூடத்தில் நடைபெற்ற அவசரக் கூட்ட நடவடிக்கைகள்**

**முன்னிலை:-செல்வி.கோ.மகேஸ்வரி,B.Com., அவர்கள்**

**தனி அலுவலர்**

**மன்றப் பொருள்கள்**

**1.** நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடித ந.க.எண்.14006/2021/தி2–2, நாள்.08.9.2021–ல் நகராட்சி நிர்வாக துறை அமைச்சர் அவர்களின் மானிய கோரிக்கையின் போது 2021–22ம் ஆண்டிற்கு அறிவிக்கப்பட்ட அனைத்து நகர்புற உள்ளாட்சி அமைப்புகளிலும் ஒரு நவீன எரிவாயு தகன மேடை அமைக்கபட வேண்டும் என தெரிவித்துள்ளதன் அடிப்படையில் நடப்பாண்டில் புதியதாக நவீன எல் பீ ஜி எரிவாயுடன் கூடிய தகன மேடை அமைக்க இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.24, சோளிங்கர் ரோட்டில் உள்ள சுடுகாடு பகுதியில் ரூ.150.00 இலட்சம் மதீப்பீட்டில் பணி மேற்கொள்ளவும், அப்பணிக்கான விரிவான திட்ட அறிக்கையுடன் கருத்துரு அனுப்பிவைக்க மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலககுறிப்பு :–**

1.மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

2.திட்ட மதீப்பீடு ரூ.150.00 இலட்சத்திற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.0811/2021/இ1)

**2.** நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடித ந.க.எண்.20028/2021/தி2, நாள்.08.9.2021–ல் நகராட்சி நிர்வாக துறை அமைச்சர் அவர்களின் மானிய கோரிக்கையின் போது 2021–22ம் ஆண்டிற்கு அறிவிக்கப்பட்ட மாநகராட்சி மற்றும் நகராட்சிகளில் விளையாட்டு திடல்கள் மற்றும் பூங்காக்கள் மேம்படுத்தபட வேண்டும் என தெரிவித்துள்ளதன் அடிப்படையில் நடப்பாண்டில் இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் ரூ.130.00 இலட்சம் மதீப்பீட்டில் கீழ்கானும் பணிகளை மேற்கொள்ள நிர்வாக அனுமதி கோரி விரிவான திட்ட அறிக்கையுடன் கருத்துரு அனுப்பிவைக்க மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண். | பணியின் பெயர் | பூங்கா எண்ணிக்கை | மதிப்பீட்டுத் தொகை (ரூ.இலட்சத்தில்) | மதிப்பீட்டுத் தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 1 | வாலாஜாபேட்டை நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.09, த.வீ.வ.வாரியம் 4வது மற்றும் 5வது பிரதான சாலையில் பூங்கா அமைக்கும் பணி | 1 | 70.00 | 130.00 |
| 2 | வாலாஜாபேட்டை நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.10, இராஜீவ்காந்தி நகர் பகுதியில் பூங்கா அமைக்கும் பணி | 1 | 60.00 | |
| | **மொத்தம்** | **2** | **130.00** | **130.00** |

**அலுவலககுறிப்பு :–**

1. மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

2. திட்ட மதீப்பீடு ரூ.130.00 இலட்சத்திற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.0812/2021/இ1)

தனிஅலுவலர்(ம)ஆணையர்,
வாலாஜாபேட்டை நகராட்சி.

மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!!

# வாலாஜாபேட்டை நகராட்சி

## நகரமன்ற அவசரக் கூட்டம்

**வாலாஜாபேட்டை நகராட்சியில் 2021-ம் வருடம் செப்டம்பர் மாதம் 30-ந் தேதி வியாழக்கிழமை காலை 11.00 மணியளவில் நகரமன்றக் கூடத்தில் நடைபெற்ற அவசரக் கூட்ட நடவடிக்கைகள்**

**முன்னிலை:-செல்வி.கோ.மகேஸ்வரி,B.Com., அவர்கள்**

**தனி அலுவலர்**

**மன்றப் பொருள்கள்**

**1.** நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதத்தில் நகராட்சி நிர்வாக துறை அமைச்சர் அவர்களின மானிய கோரிக்கையின் போது 2021–22ம் ஆண்டிற்கு அறிவிக்கப்பட்ட அனைத்து நகர்புற உள்ளாட்சி அமைப்புகளிலும் புதிய மற்றும் பழைய கழிப்பறைகள் புதுப்பிக்கப்படும் என தெரிவித்துள்ளதன் அடிப்படையில் நடப்பாண்டில் இந்நகராட்ச எல்லைக்குட்பட்ட கீழ்காணும் பகுதிகளில் சமுதாய கழிவறைகள் பழுதுபார்க்கும் பணிக்கு நிர்வாக அனுமதி மற்றும் நிதி ஒதுக்கீடு கோரி விரிவான திட்ட அறிக்கையுடன் கருத்துரு அனுப்பிவைக்க மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண். | பணியின் பெயர் | எண்ணிக்கை | மதிப்பீட்டுத் தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | வாலாஜாபேட்டை நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.17, அருந்ததி காலனி பகுதியில் உள்ள சமுதாய கழிவறை பழுதுபார்க்கும் பணி | 1 | 4.40 |
| 2 | வாலாஜாபேட்டை நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.08, பஞ்சு பேட்டை பகுதியில் உள்ள சமுதாய கழிவறை பழுதுபார்க்கும் பணி | 1 | 4.00 |
| | **மொத்தம்** | **2** | **8.40** |

**அலுவலககுறிப்பு :–**
1.மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.
2.திட்ட மதீப்பீடு ரூ.6.33 இலட்சத்திற்கு மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.0853/2021/இ1)

**2** நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதத்தில் நகராட்சி நிர்வாக துறை அமைச்சர் அவர்களின மானிய கோரிக்கையின் போது 2021–22ம் ஆண்டிற்கு அறிவிக்கப்பட்ட அனைத்து நகர்புற உள்ளாட்சி அமைப்புகளிலும் புதிய மற்றும் பழைய கழிப்பறைகள் புதுப்பிக்கப்படும் என தெரிவித்துள்ளதன் அடிப்படையில் நடப்பாண்டில் இந்நகராட்ச எல்லைக்குட்பட்ட கீழ்காணும் பகுதிகளில் பொது கழிவறைகள் பழுதுபார்க்கும் பணிக்கு நிர்வாக அனுமதி மற்றும் நிதி ஒதுக்கீடு கோரி விரிவான திட்ட அறிக்கையுடன் கருத்துரு அனுப்பிவைக்க மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண். | பணியின் பெயர் | எண்ணிக்கை | மதிப்பீட்டுத் தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | வாலாஜாபேட்டை நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.04, பேருந்து நிலையத்தில் உள்ள பொது கழிவறை பழுதுபார்க்கும் பணி | 1 | 6.70 |
| 2 | வாலாஜாபேட்டை நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.03, பூசாலிபச்சையப்பன் தெருவில் உள்ள பொது கழிவறை பழுதுபார்க்கும் பணி | 1 | 3.00 |
| 3 | வாலாஜாபேட்டை நகராட்சி எல்லைக்குட்பட்ட தினசரி மார்க்கெட் பகுதியில் உள்ள பொது கழிவறை பழுதுபார்க்கும் பணி | 1 | 2.62 |
| | **மொத்தம்** | **3** | **12.32** |

**அலுவலககுறிப்பு :–**
1.மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.
2.திட்ட மதீப்பீடு ரூ.9.00 இலட்சத்திற்கு மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.0853/2021/இ1)

தனிஅலுவலர்(ம)ஆணையர்,
வாலாஜாபேட்டை நகராட்சி.

மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!!

**வாலாஜாபேட்டை நகராட்சி**

**நகரமன்ற சாதாரணக் கூட்டம்**

**வாலாஜாபேட்டை நகராட்சியில் 2021-ம் வருடம் செப்டம்பர் மாதம் 30-ந் தேதி வியாழக்கிழமை மாலை 04.00 மணியளவில் நகரமன்றக் கூடத்தில் நடைபெற்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள்**

**முன்னிலை:-செல்வி.கோ.மகேஸ்வரி,B.Com., அவர்கள்**

**தனி அலுவலர்**

**மன்றப் பொருள்கள்**

| | |
|---|---|
| 1 | இந்நகராட்சிக்குட்பட்ட பகுதியில், பவர்னர் தெருவில், T.S.No.972, 190/2–ல் (வார்டு –2 , பிளாக் எண்.4, 16 –ல் பவர்னர் தெரு மற்றும் கொரடு அரசு புறம்போக்கு நகராட்சிக்கு சொந்தமான இடத்தில் திரு.சிவகோபல் வகையாரா திரு.கணேசன் மற்றும் கல்யாணி என்பவர்கள் கட்டிடம் கட்டி ஆக்கிரமிப்பு செய்யபட்டுள்ளனர். மேற்படி ஆக்கிரமிப்பை அகற்றிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதில், மேற்கண்ட ஆக்கிரமிப்பு செய்து கட்டப்பட்ட கட்டிடத்தை அனுபவித்து வரும், திரு.சிவகோபல் மற்றும் திரு.கணேசன் ஆகியோர் சென்னை உயர்நீதிமன்றத்தில் நகராட்சி ஆணையாளர் அவர்களை முதல் பிரதிவாதியாக சேர்த்து S.A.No.432/2021–ல் மேற்கண்ட ஆக்கிரமிப்பு செய்து கட்டப்பட்ட கட்டிடத்தினை இடிக்க கூடாது என வழக்கு தொடரப்பட்டுள்ளது.<br>மேற்படி வழக்கின் விசாரனை 04.10.2021ம் தேதியன்று சென்னை உயர் நீதிமன்றத்தில் விசாரனை வரவுள்ளதால், நகராட்சி சார்பாக அரசு கூடுதல் வழக்கறிஞர், திரு.S.V.துரை சோலைமலை, அவர்கள் அஜராகிடவும் மேற்படி வழக்களுக்கு ஆகும். தோராயச் செலவு ரூ.10,000/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><u>அலுவலக குறிப்பு:</u><br>மேற்கண்ட வழக்கில் நகராட்சி சார்பாக அரசு கூடுதல் வழக்கறிஞர் திரு.S.V.துரை சோலைமலை, அவர்கள் ஆஜராகிடவும் வழக்கு கட்டணம் ரூ.10000/–தை 2021–22ம் ஆண்டு நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதி அளிக்கலாம்.<br>(கோப்பு எண்.164/2012/எப்1) |
| 2 | இந்நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவிற்கு பொதுமக்களிடம் இருந்து வந்த கடிதங்களில் திருவிழாகள் போன்ற நிகழ்ச்சிகள் நடைபெறும் காலங்களில் பொதுசுகாதாரப்பணி செய்யும் பொருட்டும் தற்போது SCRUB TYPUS போன்ற காய்ச்சலில் இருந்து பொதுமக்கள் மற்றும் குழந்தைகளை பாதுகாக்கும் பொருட்டு இந்நகர் பகுதிகளில் உள்ள முட்புதர்களை அகற்றுவது அத்தியாவசிய பணியாக உள்ளதால் கீழ்கண்ட இடங்களில்<br>1 – சுடுகாடுக்கு செல்லும் பாதை<br>2 – திருவள்ளுவர் தெரு தூய்மைப்பணியாளர் குடியிருப்பு பகுதிகளில் உள்ள முட்புதர்கள்<br>3 – தமிழ்நாடு வீட்டுவசதி வாரியக்குடியிருப்புகளில் உள்ள முட்புதர்கள் மற்றும் குப்பை மேடுகள்<br>மேற்கண்ட அனைத்து பகுதிகளையம் JCB இயந்தரத்தினை வாடகைக்கு அமர்த்தி கொண்டு சுத்தம் செய்யும், அதற்கான தோராய செலவினத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டி வைக்கப்படுகிறது.<br><u>அலுவலகக்குறிப்பு:</u><br>1)மன்றம் அனுமதிக்கலாம்.<br>2)வருங்காலங்கள் திருவிழாக்கள், கொல்லை நோய்கள் மற்றும் கொரோனா மூன்றாம் அலை தடுக்கும் பணிக்காக எடுக்கும் நடவடிக்கைக்காக மன்றம் அனுமதிக்கலாம்.<br>3)மேற்கண்ட செலவினத்தை 2021-22-ம் ஆண்டு வரவு-செலவு திட்டத்தில் சேர்த்து பொதுநிதியில் இருந்து செலவினத்தை மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>4)தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம். |

| | |
|---|---|
| 3 | இந்நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவில் திடக்கழிவு மேலாண்மைக்கு பயன்படுத்தப்படும் தள்ளுவண்டிகள் (Push Cards) பழுதுப்பட்டுள்ளது, தினந்தோறும் வீடுவீடாக சென்று குப்பைகளை சேகரிக்க வேண்டியுள்ளதால், அவ்வப்போது தள்ளுவண்டிகள் (Push Cards) பழுதுகள் ஏற்பட்டு திடக்கழிவு மேலாண்மை பணியில் குப்பைகள் அகற்றும் பணியிலும் தொய்வு ஏற்படுவதாலும், எதிர்வரும் காலம் கொள்ளை நோய்கள் பரவும் சூழ்நிலை உள்ளதாலும் மற்றும் திடக்கழிவுகளை கையாள்வது அத்தியாவசியம் கருதி ஏற்கனவே உள்ள 15 தள்ளுவண்டிகளுக்கு சக்கரங்கள் பொருத்தி வழங்கவும், அதற்கான தோராய செலவினம் ரு.78,000/-க்கும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><u>அலுவலகக்குறிப்பு:</u><br>1)மன்றம் அனுமதிக்கலாம்.<br>2)வருங்காலங்கள் திருவிழாக்கள், கொல்லை நோய்கள் மற்றும் கொரோனா மூன்றாம் அலை தடுக்கும் பணிக்காக எடுக்கும் நடவடிக்கைக்காக மன்றம் அனுமதிக்கலாம்.<br>3)மேற்கண்ட செலவினத்தை 2021-22-ம் ஆண்டு வரவு-செலவு திட்டத்தில் சேர்த்து பொதுநிதியில் இருந்து செலவினத்தை மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>4)தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம். |

தனிஅலுவலர்(ம)ஆணையர்,
வாலாஜாபேட்டை நகராட்சி.